சுருக்கம்

பழங்குடியினர் நலம் – 2014–2015 ஆம் ஆண்டிற்கான விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் பணிகளுக்கான திட்டத்தினை செயல்படுத்த ரூ.12,58,30,000/– (ரூபாய் பனிரெண்டு கோடியே ஐம்பத்தெட்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ப.மே1(2)) துறை

அரசாணை (ப) எண்.68 நாள் 18.03.2015

ஜய வருடம் பங்குனி 4
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது

1. அரசு கடித எண். 9946/ப.மே1(2)/ஆதி(ம)பந துறை/2014–6, நாள் 16.02.2015
2. பழங்குடியினர் நல இயக்குநர் கடிதம் ந.க.எண். பமே/அ2/2327/2014, நாள் 24.02.2015.

**************

ஆணை :-

2014–2015 ஆம் ஆண்டிற்கான விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.50.00 கோடியில் திட்டங்களைச் செயல்படுத்த இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களிடம் கருத்து கோரப்பட்டது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்கள் 2014–2015 ஆம் ஆண்டிற்கான விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளை மேற்கொள்ள மூலதனக் கணக்கின் கீழ் ரூ.1183.30 இலட்சத்திலான பணிகளுக்கும், வருவாய் கணக்கின் கீழ் ரூ.148.00 இலட்சத்திலான பணிகளுக்கும் ஆக மொத்தம் ரூ.1331.30 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:-

| வ. எண். | மாவட்டம் | துறைகள் | பணிகள் விவரம் | மூலதனம் | வருவாய் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வேலூர் | வனத்துறை | கச்சா வீடுகள் பராமரிப்பு பணிகள் | 800.00 | --- | 800.00 |
| | | வனத்துறை | 8.5 கி.மீ தூரத்திற்கு ரோடு பராமரிப்பு பணிகள் (ஜவ்வாது மலை) (one layer of WBM) | 100.00 | --- | 100.00 |
| | | | பழங்குடியினர் பகுதிகளில் குடிநீர் வசதி ஏற்படுத்துதல் | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1. தூங்குமலை கிராமம், வேலூர் வட்டம் | 7.50 | ---- | 7.50 |
| | | | 2.பெரும்பள்ளி கிராமம், திருப்பூர் வட்டம் | 7.50 | ---- | 7.50 |
| | | | 3. புதூர்நாடு கிராமம், திருப்பூர் வட்டம் | 7.50 | ---- | 7.50 |
| | | | | 922.50 | ---- | 922.50 |
| 2. | 7 மாவட்டங்களில் வாழும் விரிவான பழங்குடியினர் மக்களுக்கு | வேளாண்மைத் துறை | மண்வளப் பாதுகாப்பு பணிகள் 458 பயனாளிகள் பயன்பெறும் வகையில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் 2014-15 ஆம் ஆண்டில் பணிகள் மேற்கொள்ளுதல் | 158.00 | ---- | 158.00 |
| 3. | திருவள்ளூர் | மாவட்ட ஆட்சியர் | பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் | | | |
| | | | 1. தெருவிளக்குகள் 14 Nos. | 13.25 | ---- | 13.25 |
| | | | 2. சிமெண்ட் ரோடு | 75.85 | ---- | 75.85 |
| | | | 3. குடிநீர் வசதி செய்து தருதல் | 13.70 | ---- | 13.70 |
| | | | | 102.80 | ---- | 102.80 |
| 4. | | கால்நடை பராமரிப்பு துறை | பழங்குடியினர்களுக்கு இலவச ஆடுகள் / கோழிக்குஞ்சு பொரிப்பகம் | | 75.00 | 75.00 |
| 5. | | இயக்குநர் (ப.ந) | பழங்குடியினர் நலப்பள்ளிகளுக்கு சூரிய ஒளிவிளக்கு அமைத்தல் | | 73.00 | 73.00 |
| | | | மொத்தம் | 1183.30 | 148.00 | 1331.30 |

3. இயக்குநர், பழங்குடியினர் நலன் அவர்களின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்து விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2014-2015 ஆம் ஆண்டிற்கான திட்டப்பணிகளை செயல்படுத்த முதல் கட்டமாக ரூ.1258.30 இலட்சத்திற்கு (ரூபாய் பன்னிரெண்டு கோடியே ஐம்பத்து எட்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. இதில் வருவாய் கணக்கின் கீழ் ரூ.75.00 இலட்சமும் மூலதன கணக்கின் கீழ் ரூ.1183.30 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1258.30 இலட்சம் (ரூபாய் பனிரெண்டு கோடியே ஐம்பத்தெட்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

| வ. எண். | மாவட்டம் | துறைகள் | பணிகள் விவரம் | மூலதனம் | வருவாய் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | வேலூர் | வனத்துறை | கச்சா வீடுகள் பராமரிப்பு பணிகள் | 800.00 | ---- | 800.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | வனத்துறை | 8.5 கி.மீ தூரத்திற்கு ரோடு பராமரிப்பு பணிகள் (ஜவ்வாது மலை) (one layer of WBM) | 100.00 | ---- | 100.00 |
| | | | பழங்குடியினர் பகுதிகளில் குடிநீர் வசதி ஏற்படுத்துதல் | | | |
| | | | 1. தூங்குமலை கிராமம், வேலூர் வட்டம் | 7.50 | ---- | 7.50 |
| | | | 2.பெரும்பள்ளி கிராமம், திருப்பூர் வட்டம் | 7.50 | ---- | 7.50 |
| | | | 3. புதூர்நாடு கிராமம், திருப்பூர் மாவட்டம் | 7.50 | ---- | 7.50 |
| | | | | 922.50 | ---- | 922.50 |
| 2. | 7 மாவட்டங்களில் வாழும் விரிவான பழங்குடியினர் மக்களுக்கு | வேளாண்மைத் துறை | மண்வளப் பாதுகாப்பு பணிகள் 458 பயனாளிகள் பயன்பெறும் வகையில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் 2014-15 ஆம் ஆண்டில் பணிகள் மேற்கொள்ளுதல் | 158.00 | ---- | 158.00 |
| 3. | திருவள்ளூர் | மாவட்ட ஆட்சியர் | பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் | | | |
| | | | 1. தெருவிளக்குகள் 14 Nos. | 13.25 | ---- | 13.25 |
| | | | 2. சிமெண்ட் ரோடு | 75.85 | ---- | 75.85 |
| | | | 3. குடிநீர் வசதி செய்து தருதல் | 13.70 | ---- | 13.70 |
| | | | | 102.80 | ---- | 102.80 |
| 4. | | கால்நடை பராமரிப்பு துறை | பழங்குடியினர்களுக்கு இலவச ஆடுகள்/ கோழிக்குஞ்சு பொரிப்பகம் | | 75.00 | 75.00 |
| | | | மொத்தம் | 1183.30 | 75.00 | 1258.30 |

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பிரித்து பற்று வைக்கப்பட வேண்டும் :-

4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 02 – பழங்குடியினர் நலன் – 796 – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II - மாநில திட்டம் JA – விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 16 – பெரும் பணிகள்.

(த.தொ.கு.4225-02-796-JA 1602) (ரூ.1183.30 இலட்சம்).

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 – பழங்குடியினர் நலன் – 796 – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II - மாநில திட்டம் – JY – விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 09 – உதவித்தொகை – 01 – நடப்புச் செலவுக்கான உதவித்தொகை.
(கு.தொ.கு.2225–02–796–JY 0912) (ரூ.75.00 இலட்சம்).

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்க இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.14516/ஆதி(ம)பந/ 2015, நாள் 14.03.2015–ல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை – 5.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சைதாப்பேட்டை, சென்னை – 15.
மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம்.
மாநிலக்கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18/6.35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 8.
நகல்
நிதி (ஆதி(ம)பந/வரவு செலவு பொது– I/பொது II) துறை, சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந 5) துறை,
சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18.3.15
பிரிவு அலுவலர்.

18/3/15